DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.68/21

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name சிவகுமார் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.09.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஊஞ்சாம்பட்டி இரத்தினம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்துவருகிறேன். 3.2.21ம் தேதியன்று காலை 8.15 மணியளவில் எனது அப்பா சந்தானம் வேலைக்கு சென்றுவிட்டு டிவிஎஸ்எக்சல் வாகனத்தில் வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்த போது இரத்தினம் நகர் டைல்ஸ் கடை அருகே பெரியகுளம் ரோட்டில் கோபி டைல்ஸ் கடை அருகே கிழக்கு பக்கம் திரும்பு போது பின்னால் வந்த ஆம்னி வேன் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வந்து என் அப்பா மீது மோதிவிட்டது. அதில் என் அப்பாவிற்கு தலை, கை, கால் இடுப்பு பகுதியில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அந்த வழியாக வந்து என் பக்கதது வீட்டுகாரர் ராஜேஷ்கண்ணா என்பவர் எனக்கு தகவல் சொன்னதன் பேரில் நானும், எனது தங்கையும் வந்து விபத்து நடந்த இடத்தை பார்த்த போத என் தகப்பனார் உயிரிழந்திருந்தார். எனது அப்பாவின் உடலை ஆம்புலன்ஸ் ஏற்றில் க.விலக்கு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதற்கு பிறகு அல்லிநகரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்தியவர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.